# மந்திர ராணி

லயன் காமிக்ஸ்




ரூ. 2-50
மரணத்தி
நிழலி
காமிக்ஸ்
272


விற்பனையாகிறது!
விண்வெளி படையெடுப்பு!
திகில்!
காமிக்ஸ்
ரூ 2-50/-

# மந்திர ராணி!



வாசகர்களே,

வழக்கமான காமிக்ஸ் கதையல்ல இது...! மாயாஜாலம், மந்திரம் தந்திரம் எல்லாம் கலந்த ஒரு விட்டலாச்சாரியா டைப் கதை இது! தைரியமாகப் படியுங்கள்!


ஒடெஸ்ஸா நாட்டின் காட்டுப்
பகுதி அது...இருளென்னும்
போர்வை மெல்ல சூழ்ந்து
கொண்டிருக்க கத்தை கத்தை
யாய் பனி விழுந்து கொண்டி
ருந்தது. அப்பொழுது நெடிய
தொரு உருவம் அங்கு
தோன்றியது-


அதே சமயம் மலை மீதிருந்த கற்கோட்டையினுள்-
எனக்கு மட்டும் ஏனிந்த சோதனை? எரியும் நெருப்பே நான் தேடும் விடையைக் கொடுத்து விடு!
துர் தேவதைகளே- என் கூக்குரல் உங்களை எட்டவில்லையா? சார்லாக் உங்களின் உதவியை நாடுவது தெரியவில்லையா?
ம்ம்ம். இன்னும் ஏன் மௌனம்? உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கிறேன்?


நாசமாய்ப் போக!


ராணிகளுக்கெல்லாம் ராணியே! சார்லாக் அழைக்கிறேன். நீயாவது என் உதவிக்கு வா!


8
மறுகணம்-
இதோ வந்தேன் சார்லாக்-
நெருப்பின் அரசியான
அநார்கியா நான்!


மிக்க நன்றி அநார்கியா! துர்தேவதைகள் பலரையும் அழைத்தேன்-ஆனால் பயனில்லை! ஆகையால் உன் உதவியை நாடினேன்!
உனக்கு என்ன தெரிய வேண்டும் சொல்!
இந்த உலகிற்கே அதிபதியாக விரும்புகிறேன்! அத்தகைய சக்தியை பெறுவது எப்படி?
ரொம்ப சுலபம் சார்லாக்! ஈடு இணையற்ற தங்கப் பேழையை நீ உன் வசமாக்கிக் கொள்ள வேண்டும். தங்கப் பேழையை வைத்திருப்பவனே இந்த அண்டசராச்சரத்திற்கும் அதிபதி ஆவான்!


அதைத் தொட உனக்கு அருகதை கிடையாது சார்லாக்- உன் கைகள் கறைபடிந்தவை! வீரமும் தீரமும் நிறைந்ததொரு உத்தமனால்மட்டும் தான் அதைக்கொண்டுவரமுடியும்!
அதைப் பெற நான் என்ன செய்ய வேண்டும் ராணியே?
ஆனால்· ஆனால் நான் பறவை இன மக்களின் மன்னனாயிற்றே! எனக்கா அருகதை கிடையாது!
கவலைப்படாதே- ஒரு மாவீரன் இப்பொழுது இங்கே வந்து கொண்டிருக்கிறான்! அவனை நீ பயன்படுத்திக் கொள்ளலாம்!


அங்கே பனிப் பகுதியிலோ-
இதோ நெருங்கி விட்டோம் தோழனே- இனி கவலையில்லை!


யாரங்கே- கதவைத் திறங்கள்! குளிரில் நடுங்கும் ஜீவன்கள் இரண்டு வெளியே காத்திருக்கின்றன!


ஆச்சரியமாக இருக்கிறதே- வாயில் கதவு திறந்தே கிடக்கிறது. காவலாளிகள் யாரையும் காணேமே!


ஊரே வெறிச்சோடிப்போய் கிடக்கிறது! ஆனல் அந்த கோபுரத்தின் உச்சியில் மட்டும் ஒரு சிறு வெளிச்சம் தெரிந்தது- என்ன மர்மம் இது?


குளிருக்கு ஒதுங்க நல்ல இடம்தான்! நன்ருக ஒரு தூக்கம் போட்டுவிட்டு பயணத்தை காலையில் தொடரலாம்!


திடீரென்று வானத்திலிருந்து இறங்கி வந்தன சில விசித்திர உருவங்கள்-
ஏய் - யாரது? என்னை விடுங்கள்!


எவ்வளவு திமிறியும் பயனிருக்கவில்லை!
'ஜிவ்'வென அந்த மனிதனை உயரே
தூக்கிச் சென்றன அந்த சைத்தான்கள்-


சார்லாக்கின் கோட்டையை வந்தடைந்தனர்.
யார் நீ? எங்கிருந்து வருகிருய்?
உள்ளே வா அந்நியனே உன்ஞல் எனக்கு ஒரு காரியம் ஆக வேண்டி-யுள்ளது!


என் பெயர் ஸாம்சன் ருசி நாட்டைச் சேர்ந்தவன்! என் நாட்டிற்குத் திரும்பிக்கொண்டிருக்கும்போது இந்த பனிப்புயலில் மாட்டிக்கொண்டு வழி தவறிவிட்டேன். எனக்கு சரியான வழியை காட்டி உதவ முடியுமா?


தாராளமாய்! ஆனல் அதற்கு முன்னதாக தங்கப் பேழையை என்னிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் நீ!
தங்கப் பேழையா? அது எங்கிருக்கிறது?



தங்கப் பேழையா? அது இங்கிருந்து வெகு தூரத்தில் உள்ளது! பறவை இன மக்களின் தலைவனான நான் அதை என் வசமாக்கிக் கொண்டால் உலகிற்கே அதிபதியாகி விடு-வேன்! அந்த மந்திரப் பேழையைக் கொண்டு வர உன் போன்ற ஒரு வீரனின் உதவி தேவை!
மன்னிக்க வேண்டும் சார்லாக்! நான் அவசர-மாக என் நாட்டிற்குத் திரும்பியாக வேண்டும்! இந்த மந்திரப் பேழை-யை மீட்டு வர என்னால் இயலாது!
எதிர்த்தா பேசுகிறாய் ஸாம்சன்? நான் சொன்னால் சொன்னது தான். தங்கப் பேழையை மீட்க நீ போகத் தான் போகிறாய்!
எனக்கு அந்த மந்திரப் பேழை வேண்டும்!
அடம் பிடிக்காதீர்கள் சார்லாக்! நான் களைத்துப் போயிருக்கிறேன்! புதிய முயற்சிகளில் ஈடுபட தெம்போ உற்சாகமோ என்னிடமில்லை இப்போது!




ம்ம்ம்
விடாதீர்கள்-
அமுக்குங்கள்!
ஸாம்சன்- பதிலேதும்
பேசவில்லே. அவருடைய
வாள் அவருக்குப்
பதிலாகப் பேசியது-
அந்த வலேயை
உபயோகித்து
அவனேப் பிடியுங்கள்!


நாயை சிறையில் கொண்டு போடுங்கள்! நிதானமாக யோசித்துப் பார்த்த பிறகாவது முடிவை மாற்றிக் கொள்கிறானா என்று பார்ப்போம்! ம்ம்ம்- இழுத்துச் செல்லுங்கள்!
நீ பெரிய தப்பு செய்து விட்டாய் பயலே! மன்னரின் உத்தரவுக்கு நீ அடிபணிந்திருக்க வேண்டும்!
ஒன்றாக யோசனை பண்ணி உன் முடிவை மாற்றிக்கொள்! இல்லாவிட்டால் இங்கேயே காலமெல்லாம் கடந்து செத்தொழிய வேண்டியதுதான்! சார்லக்சை எதிர்த்தவன் எவனுமே உயிரோடு தப்பியதில்லை என்பதை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்!


வாப்பா வா- பேச்சுத் துணைக்காவது ஆள் கிடைக்காதா என்று எத்தனை காலமாகக் காத்திருக்கிறேன் தெரி-யுமா? அது சரி- உன் பெயர் என்ன? எங்கிருந்து வருகிறாய்?


நான் ருசி நாட்டைச் சேர்ந்தவன். பெயர் ஸாம்சன்! ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுது வழி தவறி இங்கு வந்து சேர்ந்தேன்! இப்பொழுது சார்லாக்கைப் பகைத்துக் கொண்டுவிட்டதால் இந்த தண்டனை!
நானொரு மந்திரவாதி- என் பெயர் ஜார்விஸ்- இந்த நாட்டு மன்னருக்கு ஆலோசகனாக இருந்து வந்தேன்! ஒரு நாள் சார்லாக் வந்து சேர்ந்தான்! அவனிடம் கூடுதல் மந்திர சக்தி இருந்ததால் என்னை மன்னனிடமிருந்து விலக்கிவிட்டு, என் பதவியைப் பிடித்துக்கொண்டான்! விரைவில் மன்னரையும் கவிழ்த்துவிட்டான! அத்தோடு மட்டும் விடாமல் இந்த நகரம் முழுவதையுமே உறக்கத்தில் ஆழ்த்தி விட்டான்!
நாம் தப்பிக்க ஏதாவது வழியிருக்கிறதா ஜார்விஸ்? உங்களுக்குத்தான் இந்த ஊரைப்பற்றி நன்றாகத் தெரியுமே?
தம்பி- அப்படிப்பட்ட எண்ணங்களையெல்லாம் விட்டுவிடு! இங்கிருந்து யாராலும் தப்ப முடியாது!


அங்கே-
நெருப்பின் அரசியே- உன்னை மீண்டும் அழைக்கிறேன். என் உதவிக்கு வா- இந்த ஸாம்சன் மடையனை வழிக்குக் கொண்டு வர என்ன செய்ய வேண்டும்?
அநார்க்கியா- நான் கேட்பது உன் காதில் விழுகிறதா?


ஸாம்சனை பணிய வைப்பதற்கு லேசான வழி உள்ளது! அவனது மனைவி ஜூலியாவைக் கடத்திக் கொண்டு வா!


ம்ம்· சீக்கிரமாகப் போய்த்
தொலையுங்கள்! ஜூலியாவைக்
கொண்டு வாருங்கள்!


அன்றிரவு-
ஸாம்சன் .. எழுந்திரு-
பிரச்சனை ஆரம்பமாகிறது!
அடேய் அந்நியனே-
எங்கள் பின்னால் வா!
சார்லாக் உன்னிடம்
பேசக் காத்திருக்-
கிறார்!


என்னப்பா ஸாம்சன் நிதானமாக யோசித்து பார்த்தாயா? என் உத்தாவுக்கு கீழ்ப்படிந்து தங்க பேழையை மீட்டு வர சம்மதமா?
சார்லக்- நல்ல மாட்டிற்கு ஒரு சூடுதான்! முடியாது என்று நேற்றே சொன்னேனே- காதில் விழவில்லையா?
ஹெ-ஹெ-ஹெ! ரொம்பவும் துள்ளாதே ஸாம்சன்- இன்னும் ஓரிரு நிமிடத்தில் நீயாகப் புறப்பட்டுப் போகிருயா- இல்லையா என்று பாரேன்- அந்த திரைக்குப் பின்னல் பார்!


ஹா! ஹா! ஹா! ஹா! தங்கப் பேழையைக் கொண்டு வர மறுத்தால்- உன் மனைவி ஜூலியா இங்கிருந்து உயி- ரோடு திரும்பப் போவதில்லை. ம்ம்ம் - என்ன சொல்கிறாய் இப்போது?
சார்லாக்- உன்னை நார்த் நாராய்க் கிழித்தெறியத் துடிக்கின்றன என் கைகள் உன் கட்டளைக்கு அடிபணிகிறேன் - என்ன செய்ய வேண்டும்? எப்- பொழுது புறப்படட்டும்?


இதோ- உடனடியாகப் புறப்-
படலாம்! அதற்கான ஏற்பாடு
களெல்லாம் தயாராக
உள்ளன!


நான் சொல்லுமிடத்திற்கு
உன்னைக் கொண்டு சேர்ப்
பார்கள் நம் ஆட்கள்..
புரிகிறதா?


குட் லக் ஸாம்சன்- தங்கப் பேழையோடு திரும்பி வா!
இங்கு தான் உன்னை இறக்கி விடச் சொல்லியிருந்தார் சார்லாக்- இங்கிருந்து தங்கப் பேழையைத் தேடிப் புறப்பட வேண்டும் நீ! இன்னும் இரண்டு நாட்களுக்குப் பின் நாங்கள் திரும்பி வருவோம்- அதற்குள் தங்கப் பேழை உன் கைகளில் இல்லாவிடில் உன் மனைவி ஜுலியா தொலைந்தாள்- மறந்து விடாதே!


'நேராகப் போ' என்று சொன்னார்கள்- கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒன்றும் தெரியவில்லையே!


பாழாய்ப் போன இந்த மலே மீது எதற்காக விட்டுச் சென்றார்கள் என்னே? கீழே இறங்கு வதற்குள் பெரும் பாடாகிவிடும் போல் தெரிகிறதே!
இரவுக்கு இங்கே தங்க வேண்டியது தான்!
அப்பா . . எவ்வளவு இதமாயிருக்கிறது!


நானும் சேர்ந்து கொள்ளலாமா நண்பனே!


நான் யாரென்பது இருக்கட்டும். இந்த பயங்கரமான மலைப்பகுதி-யில் உன் போன்ற இளைஞனுக்கு என்ன வேலை?
நல்ல கேள்விதான்! ஆனால் சரியாக பதில் சொல்லத் தெரியவில்லை எனக்கு! ஒரு கட்டாயத்தின்பேரில் இங்கு நான் வந்திருக்கிறேன்! பிரசித்தி பெற்ற தங்கப் பேழையை தேடிக் கண்டு பிடிப்பதே என் நோக்கம்!
அப்படியானால் உனக்கு என் உதவி தேவைப்படும். நீ அடி-யெடுத்து வைக்கப்போவது மந்திர பூமியில்! அதன் காவலனை, நான் ஒரு கேள்வியுடன் காத்திருப்பேன்! தங்கப் பேழையை நீ மீட்டு வந்தா-லும் கூட என் கேள்விக்கு பதில் அளித்தால் தான் இங்கிருந்து தப்ப முடியும்!
போய் வருகிறேன்!


விடிகாலையில்-
என்னவொரு பயங்கரமான கனவு- ஆ-ஆனல் அது கனவில்லையா? நிஜமாகவே கிழவன் ஒருவன் என்னிடம் பேசிக் கொண்டிருந்தானு? ஆச்சரியம் தான! ம்ம் பயணத்தைத் தொடர வேண்டியது தான்!


பாறைக்குப் பாறை குதித்து ஒரு வழியாக மலையின் அடிவாரத்தை வந்தடைந்தான் ஸாம்சன்-
அப்பொழுது-
அங்கே என்ன சப்தம்?


அடக் கடவுளே- இதென்ன விசித்திர ஊர்வலம்? பறவை மனிதர்கள்- பூனை மனிதர்கள்- எலி மனிதர்கள்- எல்லாம் ஒட்டு மொத்தமாய்! ஆனால் சாதுவாகத்தான் தெரிகிறார்கள்- பேசிப் பார்க்கலாம்!
ஹோய்! ஹோய்! எங்கே போகிறீர்கள்?


அண்ணனுக்கு வெளியூர் என்பது பளிச்சென்று தெரிகிறது. இல்லா விட்டால் இது போன்ற அசட்டுக் கேள்விகள் கேட்க வாய்ப்பில்லை! பேசாமல் எங்களுடன் சேர்ந்து நடந்தால் முதுகுத் தோல் மிஞ்சும்!
என்ன சொல்கிறாய்?
திடீரென-
யார்டா அது வரிசையிலிருந்து விலகி நடப்பது? தோலை உரித்து விடுவேன்?
இந்த தடியன் யார்? எங்கே போக சொல்கிறான் நம்மை?
அரசகுமாரியின் குதிரைப்படைத் தலைவன் இவன்! நடக்கவிருக்கும் நரபலிக்கு அழைத்து போகிறான்! போதுமா?
நரபலியா?


புரியும் படியாக சொல்லித் தொலை!
சரி- சரி- சொல்கிறேன், கேட்டுக் கொள்! எங்கள் அரசகுமாரி விடுத்துள்ள மூன்று புதிர்களுக்கு பதில் சொல்ல முயற்சித்தார் டேவிஸ் எனும் பக்கத்து நாட்டு மன்னர்! அவரால் சரியான விடை சொல்ல முடியவில்லை! அதனால் சம்பிரதாயப் படி பலி கொடுக்கப் போகிறார்கள்- அவ்வளவுதான்!


முன்னமே சொன்னது காதில் விழவில்லையா? தொணத் தொணக்காமல் வரிசையில் நட- இல்லையேல் இங்கேயே உனக்கு சமாதி கட்டி விடுவேன்!


முதலைப்படையின் கண்காணிப்பில்
அந்த ஊர்வலம் நரபலி நடக்க
விருக்கும் அரங்கை நோக்கி
நகர்ந்தது.


கொல்லுங்கள்! கொல்லுங்கள்!
நரபலி! நரபலி! தொடங்கட்டும்!


கவனமாய கேளுங்கள்- அரசகுமாரி ஸலாண்ட்ராவின் உத்தரவுப்படி மன்னர் டேவிஸுக்கு முதலில் 100 சவுக்கடி கொடுக்கப்படும்! அதன் பின்னர் அந்தி சாயும் நேரத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்-படும்- இது அரச கட்டளை!


நோ! நோ! அவரை விட்டு விடுங்கள்!
மன்னிரிடம் கருணை காட்டுங்கள். அவரை விட்டு விடுங்கள்!
அவருக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன். அவரை கொன்று விடாதீர்கள்!
நரபலி! நரபலி!




சுத்தக் காட்டுமிராண்டிக் கும்பலாக உள்ளதே-
இந்த அங்கியைப் போர்த்திக் கொண்டு
கூட்டத்தோடு கூட்டமாய் கலந்து மேற்-
கொண்டு ஏதாவது விபரம் சேகரிக்க
முடிகிறதா என்று பார்க்கலாம்!


டேய் கண்ணு நீ வெளியூர்க்காரன் எனபது முகத்திலேயே எழுதி ஒட்டி இருக்கிறது. ராணியின் சிப்பாய் களுக்கு உன் மீது 'அக்கறை' வரப் போகிறது! அது சரி. பார்க்க நல்ல பிள்ளையாட்டம் தெரிகிறாயே-


உனக்கு என்ன வேண்டும்-- யார் நீ?
என் பெயரைத் தெரிந்து உனக்கு என்ன பிரயோஜனம்? மலைகளுக்கெல்லாம் அப்பால் உள்ள ஒரு தூர தேசத்திலிருந்து நான் வந்திருக்கிறேன்!


ஹா! ஹா! ஹா! ஒருக்கால் நீ மந்திர ராணியின் புதிர்களுக்கு பதில் சொல்ல வந்தவனோ?
நலல வேடிக்கையப்பா உன்னோடு- இந்த நாட்டிலேயே ராணி ஸலாண்ட்ராவின் விசித்திரங்களைப் பற்றித் தெரிந்திராத ஒரே ஆசாமி நீயாகத்தானிருக்க வேண்டும்! கவனமாகக் கேள்- இந்த ராஜ்யத்தின் மன்னராக நீ விருப்புப்பட்டால் ராணியின் மூன்று புதிர்களுக்கும் சரியான விடையை சொல்ல வேண்டும்! அப்படிச் சொல்லி விட்டாயானல் இந்த நாடு மட்டுமல்ல- அதிசய சக்தி வாய்ந்த தங்கப் பேழையும் உன் உடைமையாகிவிடும்!
புதிர்களுக்கு சரியான விடை தர முடியாவிட்டால் மரண தண்டனை. அப்படித்தானே!
சரியாகப் புரிந்து கொண்டாய்! நீ இந்த நாட்டு சிம்மாசனத்திற்கு ஆசைப்பட்டு வந்தவன்தானே!
ஆமாம்- இந்த நாட்டையும் சரி, மந்திரப் பேழையையும் சரி, அபகரித்துப் போவதற்காகவே வந்திருக்கிறேன்! போய் உங்கள் ராணியிடம் என்னைப் பற்றிச் சொல்லி வா!


எல்லோரும் கவனமாய்க் கேளுங்கள்- அண்டை நாட்டிலிருந்து வந்திருக்கும் இந்த ஆணழகன் ராணியின் புதிர்களுக்கு பதில் சொல்லப் போகிறாராம்! அப்படியானால் மன்னர் டேவிஸை விடுதலை செய்தாக வேண்டும்!
நரபலியைத் தடுப்போம்!
மன்னர் டேவிஸ் வாழ்க!

ஆர்ப்பாட்டமாய் புறப்பட்ட கூட்டத்துடன் ஸாம்சன் இழுத்துச் செல்லப் பட்டான். மந்திர ராணியின தளபதியான முதலைத் தலையன் அங்கே மரண அரங்கத்தில் காத்துக் கொண்டிருந்தான்.




ஆகட்டும்! இன்றிரவு இதே அரங்கத்திற்கு திரும்பி வா! அரசி ஸலாண்ட்ராவே உன்னிடம் புதிர்களைச் சொல்வான்! யாரங்கே, மன்னர் டேனிஸைக் கூண்டில் போட்டு அடையுங்கள்! இந்த மடையனால் அவருக்கு உயிர்ப் பிச்சை கிடைக்கிறது!




ஆனால் நீ ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஸலாண்ட்ரா ஒரு சூன்யக்காரி-
ஜாக்கிரதை!




நாய்களா- என்னை ஏன் இந்தக் கூண்டில் அடைக்கிறீர்கள்? புதியவன் யாராயினும் புதிர்களுக்கு விடை சொல்ல வந்தால் ஏற்கனவே முயற்சித்து தோல்வி கண்டவனுக்கு மன்னிப்பு வழங்குவது தானே உங்கள் சட்டம்!
உன் திமிர்த்தனம் அடங்கும் வரை அங்கேயே கிட!
நண்பர்களே, புதிர்களுக்கு விடை சொல்லப் போகும் அழகன் இவன் தான்! தம்பி- இன்னும் சில மணி நேரங்களில் இந்த நாட்டின் அதிபதியாகப் போகிறாய் எங்களுக்கெல்லாம் ஒரு 'ரவுண்ட்' ஒயின் வாங்கிக் கொடுத்தால் என்னவாம்?
அதற்கென்ன!
அந்நியனே- உனது குறுக்கீட்டசல் என் காதலர் டேவிஸ் உயிர் தப்பி விட்டார். மந்திர ராணியின் கேள்விகளுக்கு நீ பதிலளித்து விட்டால் அவர் விடுதலை செய்யப்படுவார்!
டேவிஸ் நிஜமாகவே உன்னை நேசிக்கிறாரா?


இல்லை! இந்த மந்திர ராணி ஸலாண்ட்ராவைப் பார்த்த நிமிடத்திலிருந்து அவர் அவளையே நினைத்து உருகு-கிறார்! ஆனால் என்னால் அவரை மறக்க முடியவில்லை! நீ மட்டும் வெற்றி பெற்று விட்டால் டேனிஸை நான் மீண்டும் பெற முடியும்!
ஆண்டவன் சித்தப்படி எல்லாமே நடக்கும். என்னால் முடிந்த வரை முயற்சிக்கிறேன்! வாருங்கள்- இரவு கவிழுகிறது. மந்திர ராணியைச் சந்திக்கப் புறப்படுவோம்!


அரண்மனையில்-
மேன்மைதகு இளவரசியே-இதோ மூன்று புதிர்கள்!
இப்படிக் கொடு!


ஸலாண்ட்ரா - உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்! இந்தப் பைத்தியக்காரத்தனத்தை விட்டுவிடு! அந்த இளைஞனையும் மன்னர் டேவிஸையும் சாகடித்து விடாதே!
முடியாது - தங்கப் பேழையை திருடும் முயற்சியில் என் தந்தையைக் கொன்றது ஒரு ஆண்தானே?! அந்த வர்க்கத்தையே அடியோடு ஒழித்துக் கட்டும் வரை என் வெறி தீராது! என் புதிர்களுக்கு விடை சொல்ல முடியாமல் முழிக்கும் எல்லா முட்டாள்களுக்கும் பரிசு மரணம்தான்!
கடவுளே - இன்று ஏதோ விபரீதமாய் நடக்கப் போகிறது என்று தோன்றுகிறது! நான் என்ன செய்வேன்?


இருள் கவிழ்கிறது ராணி! இதோ-
உங்கள் புதிர்களுக்கு விடை சொல்ல
நான் தயாராக உள்ளேன்!


முதலில் தங்கப் பேழையைக் கொண்டு வாருங்கள்!


கவனமாய்க் கேட்டுக் கொள் அந்நியனே! பேழையிலுள்ள தங்கத் தூசி கீழே இறங்கும் நேரத்திற்குள் எனது மூன்று புதிர்களுக்கும் நீ பதில் சொல்லியாக வேண்டும்! தயாரா?


'வள வள'வென்று வசனம் பேசியது போதும் இளவரசி! முதல் கேள்வி-யைக் கேளுங்கள்- நேரத்தை வீணடிக்கிறீர்கள்!
போட்டிக்குத் தயாரா அந்ரியனே? கவனமாகக் கேள்- நான் கேட்கப் போகும் மூன்று புதிர்களுக்கான விடையை உன்னால் சொல்ல முடியா.விட்டால் தண்டனை மரணம் தான்!


தினந்தோறும் பிறக்கும்- பிறந்த வேகத்திலேயே அழியும். அது என்ன வென்று சொல்!
ம்ம்ம் நேரமாகிறது! பதில் தெரியவில்லையா?
பொறுமையசக இருங்கள்- இளவரசி- இதோ சொல்- கிறேன்! தினமும் பிறந்து தினமும் அழிவது நம்பிக்கை!


கரெக்ட்!
விடாதே· தொடர்ந்து
பதில் சொல்!
வெற்றி உனக்கே!


இதோ இரண்டாவது புதிர்!
நெருப்பைப் போல ஒளிவிடும். சண்டையென்றால் கொதிக்கும். மரணத்தில் உறையும். அது என்னவென்று சொல்!
இரத்தம் இளவரசி! ரொம்ப சுலபம்!
கரெக்ட்!
ம்ம்ம்- மூன்றாவது புதிர் என்ன?


"முதல் இரண்டு புதிர்களுக்கு சரியாக் விடை சொல்லி விட்டாய்! இதோ மூன்றுவது புதிர்- கவனமாகக் கேள்!
அழகுப் பெட்டகம்- இதைத் தொட்டால் சுடும். நெருங்கிறல் அடிமையாக்கும். அது என்னவென்று சொல் பார்க்கலாம்!


ம்ம்- இன்னும் ஒரு சில நொடிகள் மட்டுமே உள்ளன! விடை என்ன? சொல்!
ரொம்ப சுலபம்!


அது நீ தான்! இதோ பார் . தங்கத் துகள்களின் கடைசிப் பொட்டுக்கள் இன்னமும் கீழே விழவில்லை! என் பதில் சரி தானே?
சரிதான் தம்பி! மந்திர ராணி ஸலாண்ட்ராவின் மூன்று புதிர்களுக்கும் சரியாக விடையளித்து விட்டாய்!


தங்கப் பேழையை இந்த அந்நியனிடம் ஒப்படைக்க முடியாது!


ஆ-ஆனல் ராணி நம் தேசத்து சட்டப் படி தங்கப் பேழையை ஒப்படைத்தே ஆக வேண்டும். தோல்வியை ஏற்றே தீர வேண்டும்!
மடையா! எந்தச் சட்டத்தாலும் என்னை கட்டுப்படுத்த முடியாது!


நாளை பொழுது விடிவதற்குள் நான் யாரெனபதை நீ கண்டுபிடித்தாக வேண்டும்! கண்டுபிடித்து விட்டாயானல் தங்கப் பேழையை நீயே வைத்துக் கொள்ளலாம்!
அப்படியே ஆகட்டும்! பொழுது விடியும் வரை கோட்டையின் மாடியில் நீ தங்கிக் கொள்ளலாம்!

ஐ-3.


அந்த அந்நியனின் பெயரென்ன, ஊரென்ன என்பதை எப்படி-யாவது காலைக்குள் தெரிந்து வருவது உன் பொறுப்பு! தவறி-னையோ உன் முதலைத் தலை துண்டாகி விடும்!
வ-வந்து ராணி-
இன்று மதியம் அந்த அந்நியன் மன்னர் டேவிஸைக் காதலிக்கும் பெண்ணுடன் பேசிக் கொண் டிருப்பதை என் உளவாளிகள் பார்த்தனர்-அவளை விசாரித்தால் குட்டு உடையக் கூடும்!
கொண்டு வா அந்தப் பெண்ணை!


தொடர்ந்து-
உன்னோடு கொஞ்சம் பேச பேச வேண்டியுள்ளது பெண்ணே!
தொலைந்த போ சனிப் பயலே!


நாசமாய்ப் போச்சு! இவர்களைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது!
ஆ ஆ - விடுங்கள் என்னை!


இதோ-இவள் தான் நான் சொன்ன பெண்!
என்னை ஒன்றும் செய்து விடாதீர்கள்-ப்ளீஸ்!


ஏய், நான் சொல்வதை கவனமாக கேள்! அந்த அந்நியன் யார் என்பதை எப்படியாவது கண்டு பிடித்து வந்தாயானால் உன்னுடைய காதலனை விடுவித்து விடுவேன். போ- போய் அவனைப் பற்றித் தெரிந்து வா! கோட்டையின் உச்சியில் இருக்கிறான்!


ஆஆஆஆ!
கத்தாதே!
இங்கே உனக்-கென்ன வேலை?
நீ யார்? உன் ஊரென்ன என்ற விபரத்தை அறிந்து மந்திர ராணி-யிடம் நான் சொல்லி விட்டால் என் காதலர் டேவிஸை விடுவித்து விடுவதாக சொல்லியிருக்கிறாள்!


நீ என்ன சொல்ல வரு-
கிருய் என்பது புரிகிறது!
பயப்படாதே-டேவிஸை
விடுவிக்க நான் ஒரு
வழி சொல்கிறேன்!
ரொம்ப
நன்றி
ஸாம்சன்!


நீ இங்கேயே நில்! மேக மூட்டத்தில் நிலா மறைந் திருக்கும் சமயத்தில் தான் வெளியேறப் போகிறேன்!


கோட்டையின் உச்சியிலிருந்து வெளியே தப்பினார் லாம்சன்-



பின்னர் கூண்டில் தொங்கிக் கொண்டிருந்த டேவிஸை விடுவிக்க எத்தனித்தார்.
அந்நியனே- உனக்கென்ன பைத்தியமா? எதற்காக இங்கே வந்தாய்?
வாயை மூடிக் கொண்டு என் பின்னால் வா!


ஆனால் அதிர்ஷ்டம்
அவர்கள் பக்கமில்லை!
உஷார்! கைதி
தப்பிக்கிறான்!
பிடியுங்கள் அவனை!



இந்தப் பக்கமாக வாங்கள்! உங்கள் காதலி காத்துக் கொண்டிருக்கிறாள்!




ஆனால்-
அசையாதே பெண்ணே-தலை உருண்டு விடும்!


அவர்களை விடாதீர்கள்! பிடியுங்கள்!


வெற்றிகரமாக இருவரையும் கோட்டை விட்டு விட்டீர்களா? பிரமாதம்! அவர்களுக்கு உதவி செய்த அந்தப் பெண் எங்கே இருக்கிறாள்?
இதோ!


என்னை ஏமாற்றி விட்டாயல்லவா? உன் தோலை உரிக்காமல் விடுகிறேனா பார்-
இவளை தூக்கிலிடுங்கள்!


திடீரென-
அவளைப்
பிடியுகங்ள்!


உனக்கெதற்கு அந்தச் சிரமம்? நானே செத்தொழிகிறேன்!
ராணி பொழுது விடியப் போகிறது. அந்த அந்நியனின் புதிருக்கு விடை கண்டபாடில்லையே- என்ன செய்வது?


காலையில்-
என்ன ராணி- என் புதிருக்கு விடை கண்டுபிடித்துவிட்டீர்களா? என்னைப் பற்றிய விபரம் தெரிந்து விட்டதா?


அதற்குள் மன்னர் டேவிஸ் பாய்ந்தார்.
இந்த அரக்கி இனியும் உயிர் வாழக் கூடாது! கொல்லுங்கள்!
ஆஆஆஆ!
என் கேள்விக்கு இன்னமும் பதில் சொல்லவில்லையே ராணி? ம்ம்ம் பேசுங்கள்!
எ-எனக்குத் தெரியாது...?


அப்படியானால் தங்கப் பேழை என்னுடையதாகிறது!
இவனைப் பிடித்துக் கட்டுங்கள்! கொல்லுங்கள்! தங்கப் பேழையைத் தொடுமளவிற்குத் துணிந்து விட்டான்!
நோ! வேண்டாம்!
விடை பெறுகிறேன் மந்திர ராணி!


ராணி செத்து விட்டாள்!
மந்திர ராணியின் சகாப்தம் முடிந்தது! அந்த அந்நியனைப் பிடியுங்கள்!


ம்ம்ம்- ஜல்தி! அவன்கள் குழம்பிப் போயிருக்கும் போதே தப்பி விடு- இல்லையேல் அவர்களின் ஈட்டிக்- குப் பலியாகி விடுவாய்!
ரொம்ப நன்றி பிரதர்! உன்னை ஒரு போதும் மறக்க மாட்- டேன்!


அந்த விநோதக் குதிரை
அசுர வேகத்தில்
கிளம்பியது.


அப்பாடா! ஒரு வழியாக மலைக்கு வந்து சேர்ந்து விட்டேன். சார்லாக்கின் ஆட்கள் என்னை எதிர்பார்த்து நின்று கொண்டிருப்பார்கள்!


மௌனமாகக் காத்திருந்த சாம்சனை ஒரு வயோதிகக் குரல் அழைத்தது.
என் புதிருக்கான விடையைக் கண்டு பிடித்து விட்டாயா அந்நியனே!



புதிரா? என்ன சொல்கிறாய்?
உனக்கு ஞாபகமிருக்கிறதா? நீ விழித்தெழுந்த போது சம நீளம் கொண்டு ஒரு கட்டைகள் உன் முன்னே கிடந்தன! அவற்றைத் தூக்கி எறிந்தாய் நீ! என்னு-டைய புதிர் அந்தக் கட்டைகளைப் பற்றியது!


புதிருக்கான விடையை நீ சரியாகச் சொல்லி விட்டாயானல் உன்னை சூழ்ந்துள்ள மந்திர வலை நீங்கி விடும்! ரொம்ப சுலபமான புதிர் தான் இது!
இதோ ஒரு சதுரத்திற்குள் இன் னெரு குட்டி சதுரம் உள்ளது! வெளிச்சதுரத் திற்கும் உள் சதுரத்திற்கு மிடையே உள்ள தூரம் இந்த இரு கட்டைகளின் மொத்த நீளத்தையும் விட அதிகமானது. அப்படியிருக்கும் போது வெளிக்கட்டத்திலிருந்து உள் கட்டத்திற்குப்போக வழி கண்டுபிடி! உன்னை விரட்டிவரும் எதிரிகள நெருங்கி விட்டனர்- ம் சீக்கிரம்!


கொஞ்சம் சிந்திக்க அவகாசம் கொடுங்கள் - ம்ம்ம்-


இதோ விடை!
நீ சரியான கில்லாடி! போய் வா அந்நியனே!


மறுகணம்-இருள் கவிழ்ந்த வானத்
திலிருந்து சார்லாக்கின் ஆட்கள்
வந்து சேர்ந்தனர்!
நீ காரியத்தை சாதித்து விடுவாய்
என்பது எங்களுக்குத் தெரியும்!
போகலாம் வா- சார்லாக் ஆவ-
லோடு காத்துக் கொண்டிருக்-
கிறார்!


டல மணி நேரம் கழித்து-
இதோ சார்லாக்-கின் தலைநகர்!


ஆஹா- வெற்றி! வெற்றி! தங்கப் பேழையை என்னிடம் கொடு ஸாம்சன்! இருளின் தேவதைகளே- இதோ இந்த சார்லாக் உங்களின் அதிபதியாகப் போகிறான்!


கொண்டு வா!

ல-4




விலைமதிப்பற்ற அந்த மந்திரப் பேழை
நொடிப் பொழுதில் சுக்கு நூறானது-
க்ராஷ்!


பேழையிலிருந்து எழுந்த புகை
சார்லாக்கை ஸ்தம்பிக்கச் செய்தது-
ஆஆ! எ-என்னால் மூச்சு விட முடியவில்லை! நான் சா-சாகிறேன்! காப்-காப்பாற்றுங்கள்!


மரண வேதனையில் அழுது அரற்றினான் சார்லாக்.
ஐயோ- அம்மா- நான்- செத்தேன்- உதவி- உதவி!


மறுகணம்-
சார்லாக்கின் உடல் தெறித்துப் போனது.




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன்,
முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ. எண்: 374, சிவகாசி. போன்: 21159. வெளியீடு எண்: 61
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி.


அடுத்த வெளியீடு!
லயன் காமிக்ஸ்
5-வது ஆண்டு மலர்!
மாடஸ்டி தோன்றும்
நடுக் கடலில் அடிமைகள்!
பாக்கெட் சைஸ்!
மூன்று சூப்பர் கதைகள்.....


டெக்ஸ் வில்லர் துப்பறியும்
மாய எதிரி!
சாகஸ சிறுகதை!
இரும்புக் குரங்கு!
விலை ரூ. 3/-

# வாசகர் கடிதம்!

● K. N. தியாகராஜன், சென்னை-4.

கோடை விடுமுறைக்கேற்ப ஒரு சிறந்த கௌ-பாய் படத்தை தமிழில் பார்த்த திருப்தியை ஏற்படுத்திய தந்தது இம்மாத கோடை மலர். பிசாசுப் பட்டாள ஹீரோக்கள் இனி அடிக்கடி வரமாட்டார்களா? என ஏங்க வைத்து விட்டனர்.

● பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.

வைக்கிங்குகளின் வலிமையும், கொடூரமும் எங்கள் உள்ளம் கவந்த ஹீரோ டெக்ஸ் வில்லரின் மதியூகத்தின் முன்பு சரணாகதியடைவது நகைச்சுவை கலந்த காவியம். பிசாசுப் பட்டாளம் அடிக்கும் லூட்டியில் எங்கள் கவலை-யெல்லாம் கூட பறந்து போய் விட்டது.

● ஆர். அமுதா, வடுகவிருட்சியூர்.

லயன் காமிக்ஸின் கோடை மலரின் ஒவ்வொரு பக்க-மும் சுவையான தேன் துளிகளாக மிளிர்கின்றன' லயன் காமிக்ஸின் சித்திரக் கதைகள் என்றுலே ஒரு தனி சுவை தான் சார்!

● R. காமேஸ்ரா-ஜ் பழனிசெட்டிபட்டி.

''துப்பறியும் கம்ப்யூட்டர்'' கதையில் கம்ப்யூட்டர் சரி-யான விடையைச் சொல்லி என் மனதை நெகிழச் செய்து விட்டது. மொத்தத்தில் கதை படு சூப்பர்.

● S. சுரேஷ் ஜான், S. ரமேஷ் குமார்.
உளுந்தூர்ப்பேட்டை.

ராத்திரி ரவுண்ட்-அப் கதை நகைச்சுவை தன்மை-யோடு கூறப்பட்ட இனிய பேய்க் கதை. லயனின் முடி சூடா மன்னரே! [டெக்ஸ்] கண் விழித்துக் காத்திருக்கின்-கிறோம். உங்களது 'இரத்த வெறியர்கள்' கதையின் வெற்-றியைக் காண்பதற்கு!



ரூ. 2-50
மாடஸ்டி
பிளைஸி
துப்பறியும்
நீலா
மனிதன்
விசித்திர
நால்வர்!
273



லயன்
காமிக்ஸ்